அ.வ.எண். 201/2023 வா.சா.1 - சங்கீதா 16.08.2024

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கும், என் கணவர் ராமமூர்த்திக்கும் ஏற்பட்ட திருமணம் காதல் திருமணமாகும். அந்த திருமணத்தின்போது நாங்கள் இருவரும் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தோம். திருமணம் நடந்தபோது எங்கள் இருவரின் வீட்டிற்கும் தெரியாது. கல்லூரிப்படிப்பு முடித்தபிறகு காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பிறகுதான் எங்கள் வீட்டிற்கு தெரியவந்தது. என் கணவர் ராமமூர்த்தி இறந்தபிறகு, நான் என் பெற்றோருடன் வசித்து வந்தேன் என்றால் சரிதான். என் கணவர் ராமமூர்த்தி இறந்தபின்னர், அவர் வேலை பார்த்த இடத்திலிருந்து இழப்பீடு வழங்கப்பட்டது. இழப்பீடு தொகை எவ்வளவு கிடைத்தது என்றால் சுமார் ரூ.2 இலட்சம் கிடைத்தது. என் கணவர் ராமமூர்த்தி இறந்தபிறகு, அவரது பெற்றோர்கள் வெங்கடாசலம், செண்பகவள்ளி ஆகியோர் கரூருக்கு வந்துவிட்டனர் என்றால் சரிதான். வெங்கடாசலம் எந்த வருடம் இறந்தார் என்றால் 2016ம் வருடத்தில் இறந்தார். வெங்கடாசலத்திற்கு இரத்த அழுத்தம் மற்றும் இருதயம் சம்மந்தமாக உடல்நலக்குறைவும் இருந்தது. வெங்கடாசலம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தாரா என்று எனக்கு தெரியாது. கரூரில் சிகிச்சை எடுத்தார். மருந்து உட்கொண்டு வந்தார். செண்பகவள்ளிக்கு உடல்நலக்குறைவு இருந்ததா என்றால் இருந்தது. அவருக்கு இரத்தக்கொதிப்பு மற்றும் சர்க்கரை நோய் இருந்தது. அதனால் அவருடைய கால்கள் வீக்கமாக இருந்தது. செண்பகவள்ளி மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து சிக்சை எடுத்து வந்தார். அவரை உள்நோயாளியாக சிகிச்சை எடுத்தபோது நான் உடனிருந்து பார்த்து வந்தேனா என்றால் நான் வரும்போது சென்று பார்ப்பேன். கடைசியாக மருத்துவமனையில் அவர் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தபோது, நான் சென்று பார்க்க முடியவில்லை. எந்த மருத்துவமனையில் செண்பகவள்ளி உள்நோயாளியாக இருந்தபோது, நான் சென்று பார்த்தேன் என்றால் மருத்துவமனை பெயர் ஞாபகமில்லை. செண்பகவள்ளி சிகிச்சையிலிருந்தபோது, அதற்கான சிகிச்சை கட்டணங்களை

நான் செலுத்தினேனா என்றால் ஆசைத்தம்பி செலுத்தினார். ஆசைத்தம்பி என்னுடன் நல்ல உறவு முறையில் இருக்கிறார். வெங்கடாசலம் இறப்பிற்கு நானும், என் குழந்தையும் வரவில்லை என்றால் சரியல்ல. நான் வந்தேன். செண்பகவள்ளி இறப்பிற்கு நான் வரவில்லை என்றால் எனக்கு உடல்நிலை சரியில்லாததால் மகாராஷ்டிராவில் இருந்து நான் வரவில்லை. என் மாமியார் செண்பகவள்ளியின் ஈமக்காரியங்களை 2ம் பிரதிவாதி செய்தார் என்றால் சரியல்ல. ஆசைத்தம்பி செய்தார். செண்பகவள்ளியின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் அவருக்கு ஒரு தங்கை, ஒரு அண்ணன் இருந்த விவரம் மட்டும் தெரியும். நானும், என் கணவரும் காதல் திருமணம் செய்ததால், என் மாமனார், மாமியார் பற்றிய விவரம்தான் தெரியும். என் மாமியார் செண்பகவள்ளியின் செல்போன் எண் எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. நான் அவருடன் தொடர்பில் இருந்தேன். வழக்குச்சொத்தில் உள்ள வீட்டின் கிரஹப்பிரவேசத்திற்கு நானும், என் குழந்தைகளும் வரவில்லை என்றால் சரியல்ல. வந்தோம். எப்போது கிரஹப்பிரவேசம் நடந்தது என்றால் என் கணவர் ராமமூர்த்தி இறந்து ஒரு வருடத்தில் 2007 – 2008ம் வருட வாக்கில் நடந்தது. அப்போது புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. எனது இரண்டாவது திருமணத்திற்கு என் முதல் கணவரின் பெற்றோர்கள் வந்தனரா என்றால் வந்தனர். அவர்களின் சம்மதத்தின்பேரில்தான் எனக்கு இரண்டாவது திருமணம் நடந்தது. எனது இரண்டாவது திருமணம் கும்பகோணத்தின் அருகில் கோவிலில் நடந்தது. திருமணவரவேற்பு சேலம் திருமணமண்டபத்தில் நடந்தது. எனது திருமணவரவேற்பில் புகைப்படம் எடுத்தோம். எனக்கும், ராமமூர்த்திக்கும் திருமணமானது முதல் என் கணவரின் பெற்றோருடன் நான் சுமூக உறவில் இருந்து வரவில்லை என்றால் சரியல்ல. நான் அவர்களை முற்றிலும் புறக்கணித்து வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. என் மாமியார் செண்பகவள்ளியின் மருத்துவ கட்டணங்களை ஆசைத்தம்பி செலுத்தியதற்கான பில்கள் என் வசம் இல்லை. ஆசைத்தம்பியின் கைவசம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. என் மாமியார் செண்பகவள்ளியின் ........

மருத்துவ கட்டணங்களை 1, 2 பிரதிவாதிகள் செலுத்தினார்கள் என்றால் சரியல்ல. வெங்கடாசலம், செண்பகவள்ளி ஆகியோர்களை இறுதிவரை 1, 2 பிரதிவாதிகள்தான் கவனித்து வந்தனர் என்றும், அதனால்தான் என் மாமியாட்ா செண்பகவள்ளி 1 ம் பிரதிவாதி பெயரில் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. என் மாமியார் செண்பகவள்ளி கைரேகை வைக்கக்கூடியவர். அவருக்கு கையெழுத்து போடத்தெரியாது. 1 ம் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த உயில்ஆவணத்தை பார்த்தேனா என்றால் நீதிமன்ற அனுமதியின்பேரில் எனது முந்தைய வழக்கறிஞர் மூலம் பார்த்தேன். எனது மாமனார், மாமியார் ஆகியோர்களை ஆசைத்தம்பி, அன்புசெல்வி ஆகியோர் கவனித்து வந்தனர் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மாமியார் செண்பகவள்ளி இறந்தபிறகு, உயிலின்படி 1 ம் பிரதிவாதி வழக்குச்சொத்தை அடைந்து, அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. என் மாமியார் செண்பகவள்ளி இறந்தபிறகு, 1 ம் பிரதிவாதி வழக்குச்சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் 30.07.2019 அன்று சொத்தில் சட்டவிரோதமாக நுழைந்து, அனுபவித்து வருகிறார். என் மாமியார் செண்பகவள்ளி, வழக்குச்சொத்தின் உள்ளே என்னென்ன பொருட்களை வைத்திருந்தார் என்று ஆசைத்தம்பி சொல்லி எனக்கு தெரியும். பிரதிவாதிகள் அடியாட்களுடன் வந்து, வழக்குச்சொத்தில் அத்துமீறி நுழைந்து, அதிலுள்ள பொருட்களை அபகரித்தனர் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆசைத்தம்பி, 1 ம் பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். நானும் ஒரு புகார் கொடுத்தேன். அந்த புகார் சம்மந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சமுதாய பதிவேட்டில் பதிவு செய்து, மனு ரசீது வழங்கினார்கள். வழக்குச்சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காகவும், வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காகவும், நானும், ஆசைத்தம்பியும் சேர்ந்து புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. என் மாமியார் செண்பகவள்ளியின் ஏடிஎம் கார்டை பயன்படுத்தி 1 ம் பிரதிவாதி பணத்தை எடுத்துக்கொண்டார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1 ம் ......

பிரதிவாதி எனக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த அ..வ.எண். 108/2024 வழக்கிற்கு எதிராக, நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆசைத்தம்பி நீதிமன்றத்திற்கு இன்று என்னுடன் வந்துள்ளார். என் மாமியார் செண்பகவள்ளி, என் மீதும், என் மகள் மீதும் அவர் இறக்கும்வரை மிகுந்த பாசத்துடன் இருந்து வந்தார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் மகள் பூப்புனித நீராட்டுவிழாவிற்கு என் மாமியார் வந்திருந்தார். அந்த விழாவிற்கு நான் என் மாமியாரை அழைக்கவில்லை என்றும், ஊர்க்காரர்கள் சொன்னதின்பேரில் என் மாமியார் வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் 1 ம் பிரதிவாதியை சந்தித்து சொத்து சம்மந்தமாக பேசினேனா என்றால் முதல் வழக்கு தள்ளுபடியான பிறகு, நான் அவரிடம் சுமூகமாக சொத்தை தரவேண்டி கேட்டேன். 2023 ம் வருடம் ஜுலை மாதம் சென்று கேட்டேன். நான் எந்தக்காலத்திலும் 1 ம் பிரதிவாதியை சந்தித்து சொத்தை கேட்டதில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து என் மாமியார் செண்பகவள்ளி எழுதி வைத்த உயிலின்படி, 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நானும், ஆசைத்தம்பியும் வஞ்சக்கூட்டு சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் எனக்கும், என் மகளுக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. என் மாமியார் செண்பகவள்ளி எழுதி வைத்த உயிலைப்பொறுத்து, பிரதிவாதிகளுக்கு எதிராக கூறியுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்றால் சரியல்ல.

**4** ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.